

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச் செய்த

# பாராயண சதுர்த்தம்

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

# பணிந்துரை

பாம்பனார் – வாரியார் அடிப்பொடி, சித்தாந்த ரத்தினம்
**செ.வே. சதாநந்தன்** (முதன்மைச் சுத்திகரிப்புச்சாலை ஒருங்கிணைப்பாளர் (ஓய்வு) இந்தியன் எண்ணெய் நிறுவனம்)
மேனாள் தலைவர் : சைவ சித்தாந்தப் பெருமன்றம் (1905)
தலைவர் : மகா தேஜோ மண்டல சபை (1927)

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் (1850–1929) அத்தியாச்சிரம சுத்தாத்வைத, வைதீக, சைவ சித்தாந்த ஞான பானுவாய் விளங்கிய அருளாளர். "**இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார்**" எனப்படும் முருகப்பெருமான் ஒருவனையே முழு முதற் கடவுளாகப் போற்றியவர்.

“**நான் பாடு பாட்டை நவில்பவர்க்கு நலம் நல்காய்**” என்று இறைவனை வேண்டியவர்.

மக்கள் துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும் பெற வேண்டுமென்ற கருணை உள்ளத்தால் பாம்பன் சுவாமிகள் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் 6666 பாடல்களையும், 32 வியாசங்களையும் அருளினார்கள். இவைகள் பிறவிக் கடலைக் கடக்க உதவும் பெருந்தோணியாகவும், இறைவன் திருவடிகளை அடைய மிகச்சுலபமான பக்தி மார்க்கத்தை விளக்குவதாகவும் அமைந்துள்ளன.

பாம்பன் சுவாமிகள் அருளிய கீழ்கண்ட நான்கு பாடல்கள் இந்நூலில் வெளியிடப்படுகின்றன. மக்கள் பிழையின்றி ஓதவேண்டும் என்ற கருத்தினால் இப்பாடல்கள் பதம் பிரிக்கப்பட்டுள்ளன.

“**குமாரஸ்தவம்**” : ஸ்தவம் என்றால் தோத்திரம். குமாரக் கடவுள் தோத்திரம் எனப்படும். இப்பாடல் உயர்ந்த மந்திரமாகும். இதை

முதலில் ஓதிய பிறகே பாம்பன் சுவாமிகளின் பிற பாடல்கள் ஓதப்படுவது மரபு. இப்பாடல் சுவாமிகள் தமக்குற்ற வெப்பு நோய் (சுரம்) நீங்குவதற்காகப் பாடப்பட்டது என்பது வரலாறாக இருந்தாலும், பல பிறவிகளில் மக்களுக்கு "யான்", "எனது" என்ற ஆணவமலப் பாசத்தால் தொடர்ந்து ஏற்படும் வெப்பத்தைத் தணிக்கும் சக்தி வாய்ந்ததாகும்.

இப்பாடல் பெத்த நிலையிலும் (பாசங்களால் கட்டுப்பட்ட நிலையிலும்) முத்தி நிலையிலும் (பாசங்கள் விடுபட்ட நிலையிலும்) துணை செய்ய வல்லது என்பதால் ஒவ்வொரு மந்திரமும் "ஓம்" எனத்தொடங்கி இறுதியில் இரண்டு தடவை நம: நம: (நமோநம:) என்று நிறைவு பெற்றுள்ளது.

"**சண்முக கவசம்**" **:** 12 உயிரெழுத்துக்கள், 18 மெய்யெழுத்துக்கள் ஆகியவைகளை முதல் எழுத்துக்களாகக் கொண்டு 30 பாடல்கள் அருளப்பட்டன. "**மகா மகிமையுடையச் சண்முக கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக்கத்தியிற் சேர்க்குமே**" என்று

பாம்பன் சுவாமிகள் தம் சீடருக்கு உபதேச மொழியாக அருளியுள்ளார்கள். – "**இரண்டாஞ் செவியறிவுறூவு**"

"இதனை வாற்சல்லிய விசுவாசத்துடன் நாளொன்றுக்கு ஆறுமுறை படிப்பவர்கள் எத்தகைய துன்பினின்றும் விடுதலையுறுவார்கள். முடிவில் முத்தியுமடையவார்கள். இரவில் வழி நடக்கும் போதும், வனத்தில் செல்லும்போதும், நோயால் வருந்தும்போதும், யாதானுமொரு பயங்கரமான துன்பத்தில் அகப்பட்டுக் கொண்ட போதும், நித்திரை செய்ய ஆரம்பிக்கும் போதும், மரண காலத்திலும் இக்கவசம் படிக்கப் படுமாயின் யாதொரு துன்பமில்லை என்க. படித்துப் பலனடைந்தாரும் பலர் என்க" – பாம்பனார் அருளிய '**சிறுநூற்றிரட்டு நூல்**' இப்பாடல்களுக்கு மிகச் சிறந்த உரைகளைச் சுருக்கமாக வழங்கியுள்ள பேராசிரியர் டாக்டர். **ப. இராமன்** அவர்களுக்கு மிக்க நன்றி.

**பகைகடிதல் :** "பகையை நீக்குதல்" என்று பொருள். உலகப் பற்றிலிருந்து விடுபட்டு இறைப்பற்றைப் பெறுவதற்குத் தடையாயுள்ள ஆணவப்பகையை நீக்குவதே இப்பதிகம்.

“இத்திருப்பதிகத்தை காலை, மாலை பூசித்துப் பக்தி பிறங்கப் பாடுவார் திருமயிலின் மீது செவ்வேட் பரமனைத் தரிசிப்பர். சண்முக கவச பாராயணத்திற்கு இது வேறாம்” என்று பாம்பன் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**ஆறெழுத்துண்மை :** இப்பாடல் முருகப் பெருமானின் **சரவணபவ** எனப்படும் ஆறெழுத்தின் பெருமைகளை விளக்குகிறது. இம்மகா மந்திரம் ஒன்றே மக்களுக்கு அனைத்து நன்மைகளையும், முத்தியையும் தரவல்லதாகும். நரகத்திலிருந்து விடுவிக்கும். துன்பத்தை விரைவில் தடுக்கும். பிறவியை நீக்கும். சங்கடம் தீர்க்கும். உயிர்க்குத் துணையாக இருக்கும். சாவினைத் தடுக்கும். “**பரப்பிரம வாழ்வு**” எனப்படும் பரம்பொருளுடன் கலந்திருக்கும் “**சீவன் முத்தர்**” வாழ்வைத்தரும்.

இந்த நான்கு பாடல்களின் தொகுப்பானது பாராயணம் செய்யும் அடியார்களை நான்கு பக்கங்களில் நின்று வாழ்வித்தும், வளமாக்கியும் காக்கும் கவசமாக விளங்கும் தன்மையுடையது. ஆதலால் இது “**பாராயண சதுர்த்தம்**” எனப் பெயர் பெற்றுள்ளது.

இவ்விதமான இறைப்பணிகளை எங்கள் வருங்கால சந்ததியினரும் தொடர வேண்டுமென்று பாம்பனார் பதமலரை பிரார்த்திக்கின்றோம்.

இந்நூலை அடக்க விலையில் அழகுற அச்சிட்டு உதவிய எஸ்.எஸ். கிராபிக்ஸ் அச்சகத்தின் உரிமையாளர் **திரு. சீ. அரங்கநாதன்** அவர்களைப் பாராட்டுகிறோம்.

குருவருள், திருவருள் துணையுடன் இலவசமாக நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக இந்நூலை வெளியிடுவோர்

**கீதா இராசமகேந்திரன், B.Com., M.B.A.,**

**Indianoil Star Gas Distributor, Chennai**

**கல்பனா மஹாதேவன், B.E.,**

**மஹாதேவன் சதாநந்தன், B.E., M.S., (USA)**

**விஷ்ணுப்பிரியா கார்த்திகேயன், M.C.A.,**

**கார்த்திகேயன் சதாநந்தன், B.E., Q.L.A.S.Q.S. (UK)**

**Information Technology Specialists, U.S.A.,**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

# குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம:

ஓம் ஷண்மத பதயே நமோ நம:

ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நம:

ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம:

ஓம் ஷட்கோண பதயே நமோ நம:

ஓம் ஷட்கோச பதயே நமோ நம:

ஓம் நவநிதி பதயே நமோ நம:

ஓம் சுபநிதி பதயே நமோ நம:

ஓம் நரபதி பதயே நமோ நம:

ஓம் சுரபதி பதயே நமோ நம:

ஓம் நடச்சிவ பதயே நமோ நம:

ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம:

ஓம் கவிராஜ பதயே நமோ நம:

ஓம் தவராஜ பதயே நமோ நம:
ஓம் இகபர பதயே நமோ நம:
ஓம் புகழ்முனி பதயே நமோ நம:
ஓம் ஜயஜய பதயே நமோ நம:
ஓம் நயநய பதயே நமோ நம:
ஓம் மஞ்சுள பதயே நமோ நம:
ஓம் குஞ்சரி பதயே நமோ நம:
ஓம் வல்லீ பதயே நமோ நம:
ஓம் மல்ல பதயே நமோ நம:
ஓம் அஸ்த்ர பதயே நமோ நம:
ஓம் சஸ்த்ர பதயே நமோ நம:
ஓம் ஷஷ்டி பதயே நமோ நம:
ஓம் இஷ்டி பதயே நமோ நம:
ஓம் அபேத பதயே நமோ நம:
ஓம் சுபோத பதயே நமோ நம:
ஓம் (வ்) வியூஹ பதயே நமோ நம:

ஓம் மயூர பதயே நமோ நம:

ஓம் பூத பதயே நமோ நம:

ஓம் வேத பதயே நமோ நம:

ஓம் புராண பதயே நமோ நம:

ஓம் (ப்) பிராண பதயே நமோ நம:

ஓம் பக்த பதயே நமோ நம:

ஓம் முக்த பதயே நமோ நம:

ஓம் அகார பதயே நமோ நம:

ஓம் உகார பதயே நமோ நம:

ஓம் மகார பதயே நமோ நம:

ஓம் விகாச பதயே நமோ நம:

ஓம் ஆதி பதயே நமோ நம:

ஓம் பூதி பதயே நமோ நம:

ஓம் அமார பதயே நமோ நம:

ஓம் குமார பதயே நமோ நம:

# சண்முக கவச பாராயண முறை

"கவசச் செய்யுள்களுட் சிலவற்றை விட்டுச் சிலவற்றைக் கூறலும், இடையில் எவரோடேனும் பேசுதலும் கூடாது. முன்பின் மாறிப் படித்தலும் ஆகாது. ஆகூழ் அணையாப் போகூழ் அறந்தழுவா மறம், அழுக்காறு, பத்தி ஈனம் என்பன உடையார்க்கு இக்கவசம் கிடைத்தலும், அனுட்டித்தலும், உரிய பலன் பெறலும் எண்மையாமோ?"

**- பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்.**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

# சண்முக கவசம்

**அண்டமாய் அவனி ஆகி அறியொணாப் பொருளது ஆகித்**
**தொண்டர்கள் குருவும் ஆகித் துகள்அறு தெய்வம் ஆகி**
**எண் திசை போற்ற நின்ற என்அருள் ஈசன்ஆன**
**திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க. 1**

அண்டங்களாயும், பூமியாயும், அறியமுடியாத பொருளாயும், தொண்டர்கள் குருவாயும், குற்றமற்ற தெய்வமாயும், எட்டுத்திசைகளும் தொழும்படி எழுந்தருளிய எனக்கு அருளை வழங்கும் ஈசனாயுமுள்ள உறுதியான வெற்றியையுடைய சரவணபவன் நாள்தோறும் என் தலையைக் காத்தருள்வானாக.

**ஆதி ஆம்கயிலைச் செல்வன் அணி நெற்றி தன்னைக் காக்க**
**தாது அவிழ் கடப்பம் தாரான் தான் இரு நுதலைக் காக்க**

**சோதி ஆம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க**
**நாதன் ஆம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க. 2**

எல்லாப் பொருள்களுக்கும் முதற்பொருளாக விளங்கும் திருக் கயிலைமலையான் அழகிய நெற்றியைக் காத்தருள்வானாக. தேன்சிந்தும் செங்கடம்பமாலையை அணிந்தோன் இரு புருவங்களையும் காத்தருள்வானாக. போரொளியான திருத்தணிகை மலை இறைவன் குற்றமிலாத கண்களைக் காத்தருள்வானாக. எப்பொருளுக்கும் தலைவனான கார்த்திகேயன் மூக்கினை விரும்பிக் காத்தருள்வானாக.

**இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை**
**முருகவேள் காக்க நாப்பல் முழுதும் நல்குமரன் காக்க**
**துரிசு அறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க**
**திருவுடன் பிடரிதன்னைச் சிவசுப்பிரமணியன் காக்க. 3**

இருகாதுகளையும் செவ்வேள் அவற்றின் தன்மைப்படி காத்தருள் வானாக, வாயை முருகவேள் காத்தருள்வானாக, நாக்கையும்

பற்களையும் முழுவதுமாக நல்ல குமரன் காத்தருள்வானாக. குற்றமற்ற கன்னங்களைப் பிள்ளையார் தம்பி காத்தருள்வானாக. அழகுடன் பிடரியைச் சிவ சுப்பிரமணியன் காத்தருள்வானாக.

**ஈசன் ஆம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க**
**தேசுஉறு தோள்விலாவும் திருமகள் மருகன் காக்க**
**ஆசு இலா மார்பை ஈர்ஆறு ஆயுதன் காக்க என்றன்**
**ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க. 4**

ஈசனாகிய கார்த்திகைமாதரின் மைந்தன் எனது கழுத்தைக் காத்தருள்வானாக. பொலிவுடைய தோள்களையும் விலாக்களையும் இலக்குமியின் மருமகன் காத்தருள்வானாக. குற்றமில்லாத மார்பை பன்னிரண்டு படைக்கலங்களுடையவன் காத்தருள்வானாக. என்னுடைய குற்றமிலா முழங்கைகளை அழகிய குறிஞ்சி வேந்தன் காத்தருள்வானாக.

**உறுதியாய் முன்கை தன்னை உமைஇள மதலை காக்க**
**தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க**

**புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்**
**பிறங்கு மால்மருகன் காக்க பின் முதுகைச் சேய் காக்க. 5**

உமாதேவியின் இளையமகன் உறுதியுடையதாக முன் கைகளைக் காத்தருள்வானாக. பெரிய முருகன் வலிமைமிகும்படி என் கைத்தலங்களைக் காத்தருள்வானாக, வேலிறைவன் புறங்கைகளைக் காத்தருள்வானாக. விளங்கும் திருமாலின் மருமகன் அழகிய கைவிரல்கள் பத்தினையும் காத்தருள்வானாக. சேயோன் பின் முதுகைக் காத்தருள்வானாக.

**ஊன் நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க வம்புத்**
**தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய**
**நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ**
**ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக்காக்க. 6**

மயில்வாகனன் உணவுநிறையும் வயிற்றைக் காத்தருள்வானாக. மணமாலையணிந்த உயர்ந்த திருத்தோள்களுடைய சுரேசன் கொப்பூழ் சுழியினைக் காத்தருள்வானாக, குறிகளின் நரம்புகளை

அக்கினிக்கும் கௌரிக்கும் மைந்தன் காத்தருள்வானாக. பீஜத்துடன் தண்டினையும் கந்தன் காத்தருள்வானாக. அறுமுகன் மலவாயைக் காத்தருள்வானாக.

**எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க**
**அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க**
**விஞ்சிடு பொருள் காங்கேயன் விளர் அடித் தொடையைக் காக்க**
**செஞ்சரண் நேச ஆசான் திமிரும் முன்தொடையைக் காக்க. 7**

வேலிறைவன் குறைவின்றி இடுப்பைக் காத்தருள்வானாக. அரனார்மைந்தன் அழகிய பிட்டங்கள் இரண்டனையும் காத்தருள் வானாக. மேலான பொருளான காங்கேயன் இருபிரிவான அடித் தொடைகளைக் காத்தருள்வானாக, சிவந்த திருவடிகளையுடைய அன்புடைய ஆசிரியன் வலிய முன் தொடைகளைக் காத்தருள்வானாக.

**ஏரகத் தேவன் என்தாள் இருமுழம் காலும் காக்க**
**சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க**

**நேர்உடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க**
**சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலைமலையன் காக்க. 8**

திருவேரக இறைவன் என் இரு அடிகளையும் முழங்கால்களையும் காத்தருள்வானாக. திருச்சீரலைவாய் இறைவன் சிறப்புடைய கணைக்கால்களைக் காத்தருள்வானாக. விளங்கும் திருப்பரங்குன்றமர்ந்தோன் நேரான கால் சுரண்டைகளைக் காத்தருள்வானாக. திருச்சோலை மலையன் சிறந்த குதிக்கால்களைக் காத்தருள்வானாக.

**ஐஉறு மலையன் பாதத்து அமர்பத்து விரலும் காக்க**
**பை உறு பழநிநாத பரன் அகம்காலைக் காக்க**
**மெய்யுடல் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க**
**தெய்வநாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக்காக்க. 9**

அழகுடைய குன்றுகள் தோறும் எழுந்தருளியவன் இரண்டு அடிகளிலும் பொருந்திய பத்துவிரல்களையும் காத்தருள்வானாக. அழகிய திருப்பழநி மலைத் தலைவனான மேலோன்

உள்ளங்கால்களைக் காத்தருள் வானாக. மெய் எனப்படும் முழுவதையும் ஆதியும் குற்றமற்றவனுமான சண்முகன் காத்தருள்வாயாக. தெய்வங்களுக்கெல்லாம் தலைவனான விசாகன் தினமும் எனது நெஞ்சைக் காத்தருள்வானாக.

**ஒலிஎழ உரத்த சத்தத்தொடுவருபூதப்பிரேதம்**
**பலிகொள் இராக்கதப்பேய் பல கணத்து எவை ஆனாலும்**
**கிலிகொள எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்**
**வலிஉள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில் வேல் காக்க. 10**

ஓசை எங்கும் எழும்பப் பெரிய சத்தமிட்டு வரும் பூதப்பிரேதங்கள் உயிர்ப்பலி கொள்ளும் இராக்கதப் பேய்கள் முதலிய பலவாகிய கூட்டங்களில் எவை ஆனாலும் அஞ்சும்படி என்னை வேற்படை காத்தருள்க. தீயவர் செய்யும் சூனியமும் வலிமையுள்ள மந்திரங்களும் தந்திரங்களும் என்னைத் துன்புறுத்தாமல் கூரிய வேற்படை காத்தருள்க.

**ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்**
**தாங்கிய தண்டம் எஃகம் தடிபரசு ஈட்டி ஆதி**
**பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என்மேலே ஓச்சின்**
**தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க. 11**

மிகுந்த கோபம் கொண்டு ஏந்திய வாள், வில், வேல், சூலம் முதலிய படைகளையும், கதை, சக்கரம், தடி, கோடரி, ஈட்டி முதலிய கொல்லும் தன்மையுடைய படைகளையும் பகைவர் என்மேல் வீசினால் அவை எவ்விதத் தீமையும் செய்யாதபடிக் கந்தவேளின் அழகிய திருக்கையில் பிடித்த படைக்கலநாயகமான வேற்படை என்னைக் காத்தருள்க.

**ஔவியம் உளர் ஊன் உண்போர் அசடர்பேய் அரக்கர் புல்லர்**
**தெவ்வர்கள் எவரானாலும் திடமுடன் எனை மல்கட்டத்**
**தவ்வியே வருவாராயின் சராசரம் எலாம் புரக்கும்**
**கவ்வுடைச் சூரசண்டன் கைஅயில் காக்க காக்க. 12**

பொறாமை உள்ளவர், புலால் உண்போர், மூடர், பேய், அரக்கர், அற்பர், பகைவர் முதலானோர் எவரானாலும் ஊக்கத்துடன் என்னுடன் மற்போர் செய்யத் தாவி வருவார்களேயானால் அசையும் பொருள் அசையாப்பொருள் எல்லாவற்றையும் காத்தருளும் பெருமையுடைய சூரனைக் கொன்றவனின் கையிலுள்ள வேற்படை காத்தருள்க.

**கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலி மா யானை**
**கொடிய கோள்நாய் குரங்கு கோலமார்ச்சாலம் சம்பு**
**நடையுடை எதனாலேனும் நான் இடர்ப்பட்டிடாமல்**
**சடுதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க. 13**

மிகுந்த நஞ்சுடைய பாம்பு, சிங்கம், கரடி, நாய், புலி பெரியயானை கொடியதும் வலியதுமான ஓநாய், குரங்கு, பன்றி, பூனை, நரி, முதலியவற்றாலும். கால் நடையாகவுள்ள வேறு எதனாலாயினும் நான் துன்பப்படாமல் விரைவில் வடிவேல் காத்தருள்க. கங்கை மைந்தனின் வேல் காத்தருள்க.

**ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க வன்புள்**
**சிகரிதேள் நண்டுக்காலி செய்யன்ஏறு ஆலப்பல்லி**
**நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி**
**உகமிசை இவையால் எற்கோர் ஊறிலாது ஐவேல் காக்க. 14**

ஙகர எழுத்துப் பிற எழுத்தைத் தழுவி வருவதுபோல் என்னைத் தழுவி ஞானவேல் காத்தருள்க. வலிய பறவை, எலி, தேள், நண்டுத் தெறுக்கால், செய்யான், விடமுடைய பல்லி, நகமுடைய ஓந்தி, பூரான் குளிர்ச்சிநோய்தரும் வண்டு, சிலந்தி, ஆகியவற்றால் இவ்வுலகில் எனக்கொரு துன்பம் இல்லாமல் அழகிய வேல் காத்தருள்க.

**சலத்தில் உய் வன்மீன் ஏறு தண்டுடைத் திருக்கை மற்றும்**
**நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள**
**குலத்தினால் நான்வருத்தம் கொண்டிடாது அவ்அவ் வேளை**
**பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15**

நீரில் வாழும் முதலை, சுறாமீன், திருக்கைமீன் மற்றும் நிலத்திலும் நீரிலும் பெரும்துன்பம் தருவனவாகிய கூட்டத்தினால் நான் வருத்தம் கொள்ளாதபடி அந்த அந்தப் பொழுது வலிமையுடன் இருந்து காத்தருள்க. அக்கினிமைந்தன் கூரிய வேல் காத்தருள்க.

**ஞமலி அம் பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க**
**சுமவிழி நோய்கள் தந்த சூலை ஆக்கிராண ரோகம்**
**திமிர்கழல் வாதம் சோகை சிரம் அடி கர்ண ரோகம்**
**எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க. 16**

அழகிய மயிலை வாகனமாக உடையவன் திருக்கையிலுள்ள வேல் நவக்கிரகங்களால் ஏற்படும் குற்றங்களை நீக்கிக் காத்தருள்க. பூ முதலிய கண் நோய்கள், பல்வலி, மூக்குநோய், காலின் திமிர்வாதம், சோகை, காதுவலி ஆகியவை எம்மை நெருங்காமல் பன்னிரு தோளனின் வெற்றிவேல் காத்தருள்க.

**டமருகத்து அடிபோல் நைக்கும் தலைஇடி கண்டமாலை**
**குமுறு விப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்**

**நிமிரொணாது இருத்தும் வெட்டை நீர்ப்பிரமேகம் எல்லாம்**
**எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க. 17**

உடுக்கை அடிப்பதுபோன்ற வருத்தும் தலைவலி, கண்டமாலை, வீங்கித் தோன்றும் உதட்டுச் சிலந்தி, வயிற்றுநோய், குடல் நோய், கோழை நோய், காசநோய், நிமிர முடியாதபடி செய்யும் பால்வினைநோய், நீரிழியும் பிரமேகநீர் என்னும் பால் வினை நோய் ஆகிய இவையெல்லாம் எம்மை அடையாமல் கிரௌஞ்சமலையைப் பிளந்தவனது திருக்கைவேல் காத்தருள்க.

**இணக்கம் இல்லாத பித்த எரிவு மா சுரங்கள் கைகால்**
**முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண்முளை தீமந்தம்**
**சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்தப்**
**பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்தி வடிவேல் காக்க.18**

அடங்காத பித்த எரிச்சல், கொடிய சுரவகைகள், கைகால்கள் முடங்கும்படி உறுப்புக் குறை செய்யும் தொழுநோய், வெண்மூலமுளை, பசியின்மை, கண நேரத்தில் கொல்லவல்ல

சன்னி வகைகள், என்று கூறப்படுகின்ற இந்த நோய்க் கூட்டங்கள் என்னை அடிமை கொண்டு வருத்தாமல் பெரிய ஞானசத்தி என்னும் வடிவேல் காத்தருள்க.

**தவனம் மாரோகம் வாதம் சயித்தியம் அரோசகம் மெய்**
**சுவறவே செய்யும் மூலச்சூடு இளைப்பு உடற்று விக்கல்**
**அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை**
**எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க.19**

அதிகத் தாகத்தை உண்டாக்கும் கொடியநோய், வாதநோய்கள், குளிர்ச்சியுண்டாக்கும் நோய், உணவில் வெறுப்புண்டாக்கும் நோய், உடம்மை ஈரப்பசையில்லாமல் உலரச் செய்யும் நோய், மூலச்சூடு, இளைப்புத் துன்பத்தைத் தரும் விக்கல் நோய், துன்பம் செய்யும் பேதி, சீழ், அண்டவாதங்கள், சூலை ஆகிய நோய்கள் எவையும் என்னிடத்துச சேராமல் என்னைப் பிரியாத முருகக்கடவுளின் உறுதியான வேல் காத்தருள்க.

**நமைப்புஉறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்**
**அமர்த்திடு கருமை வெண்மை ஆகு பல்தொழுநோய் கக்கல்**
**இமைக்கும் முன் உறுவலிப்போடு எழுபுடைப் பகந்தர் ஆதி**
**இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க. 20**

ஓயாமல் நமைச்சலை உண்டாக்கும் பலவகைச் சொறித் தடிப்பு, வீக்க முண்டாக்கும் பாண்டு, சோர்வைத் தரும் கருங்குட்டம், வெண்குட்டம் முதலிய தொழுநோய் வகைகள், வாந்தி, இமைப்பொழுதிற்குள் மிக்கவலியோடு பக்கங்களில் வீங்கித் துன்பம் தரும் பலவகைப் பவுந்திரங்கள், முதலியன இமைப்பொழுது அளவுகூட என்னைச் சேராமல் அருள்மிக்க வேல் காத்தருள்க.

**பல்லது கடித்து மீசை படபடஎன்றே துடிக்கக்**
**கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி**
**எல்லினும் கரியமேனி எமபடர்வரினும் என்னை**
**ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க. 21**

பற்களைக் கடித்து, மீசை படபட என்று துடிக்கக் கல்லைக் காட்டிலும் வலிமையான மார்பினைக் காட்டிக் கண்களை உருட்டிப்பார்த்து இருளைக் காட்டிலும் கருநிறமுடைய உடம்புடைய இயமன் தூதர்கள் வந்தாலும் என்னை விரைவில் தாரகாசுரனைக் கொன்றவனுடைய ஓம் ஐம் ரீம் என்னும் மந்திரவேல் காத்தருள்க.

**மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்**
**தண்நிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்**
**விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை**
**நண்ணி வந்து அருள் ஆர் சஷ்டிநாதன் வேல் காக்க காக்க. 22**

பூமியிலும் தாவரங்களிடத்தும் மலைகளிடத்தும், நெருப்பிடத்தும், குளிர்ச்சி நிறைந்த நீரிடத்தும், ஏறிச் செலுத்தப்படும் வாகனத்திடத்தும், ஆகாயத்திலும், பாதலத்தினுள்ளும், மற்றுமுள்ள வேறு எந்த இடத்திலும் என்னை நெருங்கி வந்து அருள் நிறைந்த சஷ்டித் தலைவனின் வேற்படை நன்கு காத்தருள்க.

**யகரமே போல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல் முன் காக்க**
**அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல் பின் காக்க**
**சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க**
**சிகரம் மின் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க.** **23**

யகர எழுத்துப் போல் உள்ள முத்தலச் சூலத்தைத் தாங்கும் மணம் கமழ் தோளனின் வேல் என் முன்னிடத்தைக் காத்தருள்க. அகரத்தை முதலாகக் கொண்ட பன்னிரு உயிர் எழுத்துக்கள் போல் பன்னிரு கண்களுடையவனின் வேல் என் பின் இடத்தைக் காத்தருள்க. சகரம் என்னும் எழுத்துடன் சேர்த்து சரவணபவ என்னும் ஆறெழுத்தாக உள்ளவனின் திருக்கைவேல் என் நடு இடத்தைக் காத்தருள்க. தலைமீது ஒளிவீசும் திருமுடி விளங்கும் தலைவனது வேல் கீழிடம் மேலிடம் ஆகியவற்றைக் காத்தருள்க.

**ரஞ்சிதமொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்**
**செஞ்சய வேல் கிழக்கில் திடமுடன் காக்க அங்கி**
**விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்**
**எஞ்சிடாக் கதிர்காமத்தோன் இகல்உடைக் கரவேல் காக்க.** **24**

இனிய மொழியுடைய தெய்வயானை, வள்ளியம்மையாரின் மணாளனின் சிறந்த வெற்றிவேல் கிழக்குத் திசையில் வலிமையோடு காத்தருள்க. அக்கினி திசையான தென்கிழக்கில் பேரறிவு மிக்கவனின் வேல் காத்தருள்க. தெற்கில் குறைவிலாத கதிர்காமத் தோனின் வலிமையான திருக்கை வேல் காத்தருள்க.

**லகரமே போல் காளிங்கன் நல் உடல் நெளிய நின்று**
**தகர மர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்**
**நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்**
**இகல் அயில் காக்க வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க. 25**

லகர எழுத்தின் வடிவம்போல் காளிங்கன் என்ற பெயருடைய கரியபாம்பின் உடல்நெளிய நின்று, சிதையக் கடைந்த சங்கு ஏந்திய திருமாலின் மருமகனின் திருக்கையிலுள்ள வேல் என்னைத் தென்மேற்குத் திசையில் அழியாமல் காத்தருள்க. மேற்குத்திசையில் பகையை வெல்லும் வேல் காத்தருள்க. வடமேற்குத் திசையில் குகனது சுடர் வேல் காத்தருள்க.

**வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க**
**விடைஉடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க**
**நடக்கையில் இருக்கு ஞான்று நவில்கையில் நிமிர்கையில் கீழ்க்**
**கிடக்கையில் தூங்கு ஞான்று கிரிதுளைத்துள வேல் காக்க. 26**

குபேரன் திசை எனப்படும் வடக்குத் திசையில் சிவகுமாரனின் அருள் நிறைந்த அழகிய வேல் காத்தருள்க. வடகிழக்குத் திசை காவலரான காளை வானகமுடைய ஈசானர் திசையில் சிவனுக்குப் பிரணவத்தை உபதேசித்த ஆசிரியனின் வேல் காத்தருள்க. நடக்கும் போதும் அமர்ந்திருக்கும் போதும். பேசும் போதும், நிமிர்ந்து நிற்கும் போதும். கீழே படுத்திருக்கும் போதும், தூங்கும் போதும், கிரௌஞ்ச மலையைத் துளைத்த வேல் காத்தருள்க.

**இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்**
**வழங்கு நல் ஊண் உண்போதும் மால் விளையாட்டின் போதும்**
**பழம்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்**
**செழும் குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க. 27**

என்றும் அழிவில்லாத பேரின்ப வாழ்வை அளிக்கும் முத்தித்தலைவரின் திருக்கையிலுள்ள வேல் வழங்கப்படும் சுவையான உணவை உண்ணும்போதும், காதல் மயக்கக் கேளிக்கையின் போதும், பழைமையான தேவர்கள் தொழுகின்ற திருவடிகளைத் தொழுது மனத்தை அடக்கும் போதும் அருள்நிறைந்த குணத்துடன் காத்தருள்க. வலிமையுடன் மயில்வாகனமும் காத்தருள்க.

**இளமையில் வாலிபத்தில் ஏறிடும் வயோதிகத்தில்**
**வளர் அறுமுகச் சிவன்தான் வந்து எனைக் காக்க காக்க**
**ஒளி எழுகாலை முன்எல் ஓம் சிவசாமிகாக்க**
**தெளிநடு பிற்பகற்கால் சிவகுரு நாதன் காக்க. 28**

இளமை, வாலிபம், முதுமை என்னும் ஒவ்வொரு பருவத்திலும் வளரும் அறுமுகச் சிவன் அருகிருந்து காத்தருள்வானாக, சூரியோதயத்திலும், முற்பகலிலும் ஓங்கார சொரூபனான சிவசாமி காத்தருள்வானாக. தெளிவாக நடுப்பகலிலும் பிற்பகலிலும் சிவகுருநாதன் காத்தருள் வானாக.

**இறகுஉடைக் கோழித் தோகைக்கு இறை முன்இராவில் காக்க**
**திறல்உடைச் சூர்ப்பகைத்தே திகழ் பின்இராவில் காக்க**
**நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க**
**மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க. 29**

இறக்கைகளையுடைய கோழிக்கும் தோகையுடை மயிலுக்கும் தலைவன் முன் இரவில் காத்தருள்வானாக, வலிமையுடைய சூரபன்மனின் பகைவரான இறைவன் விளங்கும் பின் இரவில் காத்தருள்வானாக. தேன்சிந்தும் திருவடிகளில் சிலம்பணிந்தவன் நள்ளிரவில் காத்தருள்வானாக. வேதங்கள் தொழும்குமரனான எம்அரசன்மாறாமல் காத்தருள்வானாக.

**இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க**
**தனிமையில் கூட்டம் தன்னில் சரவணபவனார் காக்க**
**நனி அனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்**
**கனிவொடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்க வந்தே. 30**

சேரத்தகுந்த இனம் எனத் தொண்டர்களோடும் கூட்டுவிக்கும் செட்டியாக வந்த குமரன் காத்தருள்வானாக. தனிமையிலிருக்கும் போதும் கூட்டத்துடன் இருக்கும் போதும் சரவணபவன் காத்தருள்வானாக. கந்தரநுபூதியை நன்கு பாடியருளிய அருணகிரிநாதரின் அரசன் காத்தருள்வானாக. இந்தச் சண்முக கவசத்தை அன்புடன் பாடியருளிய குமரகுருதாசன் தொழுகின்ற கடவுளானவன் வந்து காத்தருள்வானாக.

**திருச்சிற்றம்பலம்**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

# பகை கடிதல்

திருவளர் சுடர்உருவே, சிவைகரம் அமர்உருவே,
அருமறை புகழ்உருவே, அறவர்கள் தொழும்உருவே,
இருள்தபும் ஒளிஉருவே, என நினை எனது எதிரே,
குருகுகண் முதல்மயிலே, கொணர்தி உன் இறைவனையே. 1

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல் பகர்உருவே,
பொறைமலி உலகுஉருவே, புனநடை தரும் உருவே,
இறை உள முகஉருவே, எனநினை எனது எதிரே,
குறைவு அறு திருமயிலே, கொணர்தி உன் இறைவனையே. 2

இதரர்கள் பலர்பொரவே, இவண் உறை எனது எதிரே,
மதிரவி பலஎனதேர், வளர்சரண் இடைஎனமா,

சதுரொடு வருமயிலே, தடவரை அசைவுஉறவே,
குதிதரும் ஒருமயிலே, கொணர்தி உன் இறைவனையே. 3

பவநடை மனுடர்முனே, படர்உறும் எனதுஎதிரே,
நவமணி நுதலணிஏர், நகைபல மிடறு அணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே,
குவலயம் வரும் மயிலே, கொணர்தி உன் இறைவனையே. 4

அழகுஉறு மலர் முகனே, அமரர்கள் பணி குகனே,
மழ உரு உடையவனே, மதி நனி பெரியவனே,
இழவு இலர் இறையவனே, என நினை எனது எதிரே,
குழகு அது மிளிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே. 5

இணை அறும் அறுமுகனே, இத சசி மருமகனே,
இணர்அணி புரள்புயனே, எனநினை எனதுஎதிரே
கணபண அரவுஉரமே, கலை(வு) உற எழுதரும் ஓர்
குணம்உறு மணிமயிலே, கொணர்தி உன் இறைவனையே. 6

எளியவ, என்இ இறைவ, குகா எனநினை எனதுஎதிரே,
வெளிநிகழ் திரள்களைமீன், மிளிர்சினை எனமிடைவான்,
பளபள எனமினுமோ பலசிறை விரிதருநீள்,
குளிர்மணி விழிமயிலே, கொணர்தி உன் இறைவனையே 7

இலகுஅயில் மயில்முருகா, எனநினை எனதுஎதிரே,
பலபல களமணியே, பலபல பதமணியே,
கலகல கலஎனமா, கவினொடு வரும் மயிலே,
குலவிடு சிகைமயிலே, கொணர்தி உன் இறைவனையே 8

இகல் அறு சிவகுமரா, எனநினை எனது எதிரே,
சுகமுனிவரர் எழில்ஆர், சுரர் பலர் புகழ் செயவே,
தொகுதொகு தொகுஎனவே, சுரநடம் இடும்மயிலே,
குகபதி அமர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே. 9

கருணைபெய் கனமுகிலே, கடமுனி பணிமுதலே,
அருணையன் அரன்எனவே, அகம்நினை எனதுஎதிரே,
மருமலர் அணிபலவே, மருவிடும் களமயிலே,
குருபல அவிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே. 10

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

# ஆறெழுத்துண்மை

அற்புதம் ஆகிய அருமறை மொழிபோல்
வெற்புயர் புவனம்பல் விளங்கிடு மாறு
பற்பல தேவர்கள் படர்ந்தவிண் உறினும்
தற்பரம் ஆவது சரவண பவவே. 1

பத்தியும் ஞானமும் பரவிடும் மார்க்கம்
எத்தனையோவகை இருக்கினும் இகத்தில்
முத்திதந்து அனுதினம் முழுப்பலன் நல்கச்
சத்தியம் ஆவது சரவண பவவே. 2

பூசிக்கும் வானவர் புரவலன் ஆவி
வாசிக்கும் மா அடி வழிபடின் என்றும்
பாசத்தை நசித்துஇவண் பரப்பிரம வாழ்வைத்
தாசர்பங்கு ஆக்கிடுஞ் சரவண பவவே. 3

அருணலம் உள்ளவன் ஆதிமுன்னுள்ளான்
பொருள் நலம் உள்ளவன் பூசிதஅடியார்க்கு
இருணில மெய்தினம் இதமுடனே அத்
தருணத்திற் காப்பது சரவணபவவே. 4

பொடிபொலி மேனியன் புரண வியோம
வடிவுடை அயிலுடை மனனடி கைகூப்பு
அடியவர்க்கு இடுக்கண் அவனியிற் குறுகின்
சடிதியிற் தடுப்பது சரவணபவவே. 5

மஞ்சிகைச் செவியோன் மயிற்பரி ஊர்வோன்
தஞ்சம் என்றவர்க்கு அருள் தருசமர் ஊரான்
செஞ்சரண் வாழ்த்துநர் திருவடி சேர்வார்
சஞ்சலந் தவிர்ப்பது சரவணபவவே. 6

பொங்கிடும் புனலில் அம்பூவில் வெங்கனலில்
எங்கணும் உளவெளியில் வளிபகலில்
கங்குலி அடியவர் கருத்துநன்காகச்
சங்கடந் தீர்ப்பது சரவணபவவே. 7

தென்திசைக் கோன்விடு திரிவிதத் தூதர்
குன்றெனும் புயமலை குலுங்கமுக்குடுமி
வென்றிகொள் கடந்தடி வீசி வெம்பிடினும்
தன் துணையாவது சரவணபவவே. 8

தேவியுந் தேவனுந் திருவுரு அருவம்
மேவி அனாதியாய் மிளிர்தலசண் முகமென்
ஆவல் உற்று உணர்பவர் அழிவுறா வண்ணஞ்
சாவினைத் தடுப்பது சரவண பவவே. 9

இந்திரன் முனிவர்கள் ஏத்து பொற்சரணான்
செந்திரு நகரிடஞ் சேர்ந்ததில் வாழ
அந்திருப் புகழ் பாடினவர்க்கு அபயம்
தந்ததைத் தருவது சரவண பவவே. 10